## உயர்நிலை வகுப்புகள் – மாநிலக் கற்றல் விளைவுகள் - வகுப்பு 10

| இயல் – பொருண்மை | கற்றல் விளைவு | பாடத்தலைப்பு |
|---|---|---|
| 1<br>மொழி | 1. தமிழ்மொழியின் செழுமை குறித்து ஆற்றலுடன் தனித்தமிழில் உரையாற்றுதல். கவிதையைப் படித்துச் சுவைத்தல், பொருளுணர்தல். | அன்னை மொழியே! |
| | 2. மொழியிலுள்ள வகைப்படுத்தப்பட்ட சொல்வளங்களின் பொருளையும் நுட்பத்தையும் பேச்சிலும் எழுத்திலும் இடமறிந்து கையாளுதல், புதிய சொற்களை உருவாக்கி எழுதுதல். | தமிழ்ச்சொல் வளம் |
| | 3. மொழி, தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரும் நுட்பத்தையும் அதன் நயங்களையும் அறிந்து முறையாக மொழியைப் பயன்படுத்துதல். | இரட்டுற மொழிதல் |
| | 4. உரைநடையில் பயின்றுவரும் அணிநயங்களைக் கண்டறிதல், பொருளுக்குப் பொருந்திவரும் தன்மையுணர்ந்து படித்துச் சுவைத்தல், நயமான தொடர்களுடன் உரைகளை எழுத முற்படுதல். | உரைநடையின் அணிநலன்கள் |
| | 5. எழுத்து, சொல்லின் அடிப்படை இலக்கணம் அறிந்து மொழியைக் கையாளுதல். | எழுத்து, சொல் |
| 2<br>இயற்கை, சுற்றுச்சூழல் | 6. இயற்கையின் இன்றியமையாத ஆற்றலான காற்றின் தேவையையும் காற்று மாசுபாடு குறித்த விழிப்புணர்வையும் ஊட்டத்தக்கவாறு மொழியைப் பயன்படுத்துதல். | கேட்கிறதா என்குரல்! |

www.kalviamuthu.com

| | | |
|---|---|---|
| | 7. கவிதைகளிலும் கதைகளிலும் இடம்பெறும் நிகழ்வுகளைச் சுவையுணர்ந்து படித்தல், அவற்றின் மொழிக்கூறுகளை உணர்ந்து பேசுதல், எழுதுதல் மற்றும் அவை போன்ற படைப்புகளை உருவாக்குதல். | காற்றே வா! |
| | 8. சங்ககால வாழ்வு செய்யுளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள நுட்பத்தினையும் அதன் மொழிப் பயன்பாட்டுத்திறனையும் படித்துச்சுவைத்து, அவை சார்ந்த தங்களின் கருத்துகளைப் பதிவுசெய்தல். | முல்லைப்பாட்டு |
| | 9. குறிப்புகளைக் கொண்டு படைப்புகளை உருவாக்குதல், அனுபவங்கள்வழி வெளிப்படும் எண்ணங்களை வருணித்தும் விவரித்தும் எழுதுதல். | புயலிலே ஒரு தோணி |
| | 10. மொழியில் பொருள் வெளிப்பாட்டிற்கேற்பப் பயன்படுத்தப்படும் தொகைநிலைகளின் தன்மைகளை அறிந்து எழுதுதல். | தொகைநிலைத் தொடர்கள் |
| 3<br>**பண்பாடு** | 11. வாழ்வியலுடன் பிணைந்துள்ள மொழியின் பண்பாட்டுக் கூறுகளுள் ஒன்றான விருந்தோம்பலின் மாண்பினை உணர்ந்து பின்பற்றுதல், பண்பாட்டுக் கூறுகள் சார்ந்து ஒப்பிட்டுப்பேசவும் கலந்துரையாடவும் திறன்பெறுதல். | விருந்து போற்றுதும்! |
| | 12. இலக்கியங்களில் சொல்லப்பட்டுள்ள விருந்தோம்பல் கருத்துகளையும் அதன் மொழியையும் படித்துப் புரிந்துகொள்ளுதல். | காசிக்காண்டம் |

www.kalviamuthu.com

| | | |
|---|---|---|
| | 13. உணவு ஆக்கும் தன்மை, விருந்தோம்பும் முறை ஆகியவை மொழியில் நயம்படச் சொல்லப்படும் திறம் அறிந்து ஈர்ப்புடன் பேசவும் எழுதவும் பழகுதல். | மலைபடுகடாம் |
| | 14. சிற்றூர் மக்களின் வாழ்வியல்முறையையும் பயன்பாட்டு மொழியையும் வட்டார இலக்கியங்களின் நடையில் படித்துப் புரிந்துகொள்ளுதல். | கோபல்லபுரத்து மக்கள் |
| | 15. மொழிப் பயன்பாட்டில் தொகாநிலைத் தொடர்களின் வகைகளை அறிந்து எழுதுதலை முறைப்படுத்துதல். | தொகாநிலைத் தொடர்கள் |
| **வாழ்வியல் இலக்கியம்** | 16. எளிமையும் இனிமையும் நிறைந்த அறஇலக்கியத்தைப் படித்துச் சுவையுணர்தல், மனதில் நிறுத்துதல், வாழ்வில் பயன்படுத்துதல். | திருக்குறள் |
| **4 அறிவியல், தொழில்நுட்பம்** | 17. வளர்ந்து வருகின்ற தொழில்நுட்பங்கள் நம் மொழியில் திறம்படச் சொல்லப்படும் பாங்கறிந்து மொழியைக் கையாளுதல். தொழில்சார் கருத்துகளைப் புதுப்பித்தல். | செயற்கை நுண்ணறிவு |
| | 18. அறிவியல் கருத்துகள் உட்பொதிந்துள்ள செய்யுள்களின் கருத்து வெளிப்பாட்டுத் திறனைப் படித்துணர்ந்து எதிர்வினையாற்றுதல். | பெருமாள் திருமொழி |
| | 19. செய்யுள் கருத்துகளோடு அறிவியல் செய்திகளை ஒப்பிட்டுப் புரிந்துகொள்ளுதல். | பரிபாடல் |

www.kalviamuthu.com

| | | |
|---|---|---|
| | 20. உரையாடல்வழி கருத்துகளைப் படித்துப் பொருளுணர்தல், அறிந்த, படித்த கருத்துகளை உரையாடலாக வெளிப்படுத்துதல். | விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை |
| | 21. இலக்கண அடிப்படைகளைப் புரிந்துகொண்டு பிழையற்ற சொல், தொடரமைப்புகளைப் பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துதல் | இலக்கணம் – பொது |
| **5 கல்வி** | 22.மொழிபெயர்ப்பின் இன்றியமையாமையையும் நுட்பத்தையும் உணர்ந்து மொழிபெயர்ப்புப் பகுதிகளைப் படித்தல், படித்த பகுதியின் கருத்துகளுடன் தங்கள் கருத்துகளையும் இணைத்து எளிமையாக வழங்கும் திறன் பெறுதல். | மொழிபெயர்ப்புக் கல்வி |
| | 23.செய்யுள் உணர்த்தும் கல்வி சார்ந்த கருத்துகளை அறிந்து சுவைத்தல், இன்றைய கல்வியுடன் ஒப்பிட்டு உணர்ந்து பேசுதல், எழுதுதல். | நீதி வெண்பா |
| | 24.புராண இலக்கியத்தின் மொழி, தொடர் அமைப்புகளை அறிதல், அறிவால் பெறப்படும் சமூக மதிப்பு காலந்தோறும் மாறாதிருப்பதைப் படித்துச் சுவைத்தல். | திருவிளையாடற்புராணம் |
| | 25.மொழிபெயர்க்கப்பட்ட நிகழ்வை, கதையைப் படித்துப் பொருளுணர்வதுடன் கருத்துகளைத் தொகுத்து வரிசைப்படுத்தி எளிமையாக வழங்குதல். | புதிய நம்பிக்கை |
| | 26.மொழியில் வினாக்கள், விடைகள் கட்டமைக்கப்படும் தன்மையறிந்து மொழியைக் கையாளுதல், பொருள்கொள்ளும் முறையறிந்து செய்யுளைப் படித்துச் சுவைத்தல். | வினா, விடை வகைகள், பொருள்கோள் |

www.kalviamuthu.com

| | | |
|---|---|---|
| 6<br>**கலை, அழகியல், புதுமைகள்** | 27.தமிழர்தம் நிகழ்கலைகளின் மேன்மையறிந்து, அவற்றை வளர்க்கவும் நிலைபெறச் செய்யவும் மொழிவழியாகத் தங்களின் பங்களிப்பைத் தருதல். | நிகழ்கலை |
| | 28.எளிய சொற்களும் கருத்துகளும் கவிதைப்பொருளாகும் திறமறிந்து கவிதை படித்தல், படைத்தல். | பூத்தொடுத்தல் |
| | 29.கருத்து வெளிப்பாட்டிற்கு ஏற்ற மொழிநடையைச் சிற்றிலக்கியம் வாயிலாகப் படித்தறிந்து சந்தநயத்தினைப் பிரித்துணர்ந்து சுவைத்தல். | முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் |
| | 30. அழகியலும் கலைநயமும் இலக்கியத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமையை அறிந்து செய்யுளைப் படித்தல், அதனுள் பொதிந்துள்ள பொருள், சொல், ஓசைநயங்களை உணர்ந்து இலக்கியம் பயிலும் ஆர்வம்பெறல். நா நெகிழ், நாபிறழ் பயிற்சிகளில் ஆற்றல்பெறுதல். | கம்பராமாயணம் |
| | 31. கதைகளைப் படித்து மையக் கருத்துணர்தல், கதை குறித்துக் கலந்துரையாடுதல். | பாய்ச்சல் |
| | 32. தமிழரின் அகப்பொருள் இலக்கணத்தை அறிதலின் வாயிலாக, இயற்கையுடன் ஒன்றியிருந்த பண்டைய மக்களின் வாழ்க்கைமுறைகளைப் புரிந்துகொள்ளுதல். | அகப்பொருள் இலக்கணம் |
| **வாழ்வியல் இலக்கியம்** | 33.எளிமையும் இனிமையும் நிறைந்த அறஇலக்கியத்தைப் படித்துச் சுவையுணர்தல், மனதில் நிறுத்துதல், வாழ்வில் பயன்படுத்துதல். | திருக்குறள் |

www.kalvianuthu.com

| | | |
|---|---|---|
| **7 நாகரிகம், தொழில், வணிகம், நாடு, சமூகம், அரசு, நிருவாகம்** | 34.தன்வரலாறு என்னும் இலக்கிய வகைமையின் கருத்து வெளிப்பாட்டுத் தன்மையினைப் புரிந்து, அதுபோல எழுத முற்படுதல். | சிற்றகல் ஒளி |
| | 35.கவிதையின் மையக்கருத்தறிதல், கவிதையில் சொற்களும் தொடர்களும் பயன்படுத்தப்பட்டுள்ள முறையறிந்து புதுக்கவிதை படித்தல், படைத்தல். | ஏர் புதிதா? |
| | 36.வேந்தர்களின் சிறப்புணர்த்தும் கல்வெட்டு இலக்கியமான மெய்க்கீர்த்தியின் தனித்தன்மை உணர்ந்து படித்தல். | மெய்க்கீர்த்தி |
| | 37.முதல் காப்பியத்தின் மொழிநடை அறிதல், காப்பியம்வழி அக்காலச் சமூக வாழ்வையும் பயன்பாட்டு மொழியையும் படித்துச்சுவைத்தல். | சிலப்பதிகாரம் |
| | 38.நாட்டின் பன்முக வளர்ச்சிக்கு வித்திட்ட பெண்களின் பங்களிப்பினைக் கலைநிகழ்ச்சி விவரிப்பாக வெளிப்படுத்தும் ஆற்றல்பெறுதல். | மங்கையராய்ப் பிறப்பதற்கே . . |
| | 39.புறப்பொருள் இலக்கணத்தைப் படித்தலின் வாயிலாகச் செய்யுளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பண்டைய போர்முறைகளைத் தெரிந்துகொள்ளுதல். | புறப்பொருள் இலக்கணம் |

www.kalvianuthu.com

| | | |
|---|---|---|
| 8<br>அறம்,தத்துவம்,<br>சிந்தனை | 40. அறக்கருத்துகளை வேராகக் கொண்ட சங்க இலக்கியப் பாடல்களின் மையப்பொருளறிதல், உரைநிகழ்த்துதல், அக்கருத்துகள் இன்றும் சமூகத்தில் பொருந்தி நிற்பது குறித்துக் கலந்துரையாடுதல். | சங்க இலக்கியத்தில் அறம் |
| | 41. குறிப்புப் பொருள் உணர்த்தும் புதுக்கவிதை இயல்பறிந்து படித்தல், மையக்கருத்துணர்தல். | ஞானம் |
| | 42. தொடைநயம் அமையப் பெற்ற புதுக்கவிதையினைப் படித்தல், தத்துவமொழியாம் தமிழின் நுட்பமறிந்து சுவைத்தல், அதுபோல எழுத முனைதல். | காலக்கணிதம் |
| | 43. கட்டுரை, நாடகம் போன்ற இலக்கிய வடிவங்களின் வாயிலாகக் கருத்துகளைப் படித்துணர்தல், கருத்துகள் வலுவாகச் சொல்லப்படுவதற்கு ஏற்ற வடிவத்தினைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்துதல். | இராமானுசர் – நாடகம் |
| | 44. செய்யுளின் யாப்பு அமைப்புகளை அறிந்து படித்தல், அவற்றுள் அமைந்துள்ள யாப்புக்கூறுகளைப் புரிந்துகொண்டு செய்யுள்கூறுகளைப் பிரித்தல், யாப்புக் கட்டமைப்பின் நுட்பமறிந்து சுவைத்தல். | பா– வகை, அலகிடுதல் |
| 9<br>மனிதம்,<br>ஆளுமை | 45. மாற்றுச் சிந்தனைகள் சமூகத்தில் ஒருவரைத் தனித்து அடையாளம் காட்டுவதைப் படித்துணர்ந்து, அதுபோன்று சிந்திக்கும் ஆற்றல் பெறுதல். ஆளுமையை மையமிட்ட கருத்துகளைத் தொகுத்து முறைப்படுத்திச் சீர்மையுடன் இதழ் வடிவில் வெளிப்படுத்துதல். | ஜெயகாந்தம் – நினைவு இதழ் |

www.kalviamuthu.com

| | | |
|---|---|---|
| | 46. வெவ்வேறு தளங்களிலுள்ள மக்களின் வாழ்க்கைப்பதிவுகளை இலக்கியம் மூலம் படித்தல், அதுபோலப் படைத்தல். | சித்தாளு |
| | 47. மனித மாண்புகளையும் விழுமியங்களையும் உட்பொருளாகக் கொண்ட பிற்காலக் காப்பிய இலக்கியத்தைப் படித்தல். | தேம்பாவணி |
| | 48. நேர்த்தியும் செப்பமும் கொண்ட கதைகளை ஆர்வத்துடன் படித்தல், அது போல எழுதுதல். | ஒருவன் இருக்கிறான் |
| | 49. அணியிலக்கணக் கூறுகளைச் செய்யுளுடன் தொடர்புபடுத்தி அதன் சுவையுணர்ந்து நயத்தல். | அணிகள் |

www.kalviamuthu.com